**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**MCOP. 75/2019**

**Deposition of: R.W.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** நிஷாபானு | **Father Name :** | |
| **Village** | **:** | **Taluk** | **:** |
| **Nationality** | **:** | **Age** | **:** |
| **Calling** | **:** | | |

**Solemnly affirmed by in accordance with the provision of the Indian Oath Act 44 of 1969, on Date:28.03.2024 at 12.40 p.m to 12.45 p.m.**

நான் இவ்வழக்கின் 3ம் தரப்பினர் ஆவேன். வட்டார் போக்குவரத்து அலுவலகம் வாழப்பாடியில் உதவியாளராக பணி செய்து வருகிறேன். மேற்படி வட்டார போக்குவரத்து அதிகாரி அவர்களுக்கு அழைப்பானை சார்வு செய்யப்பட்டதன் தொடர்சியாக அவர் சார்பாக நான் சாட்சியம் அளிக்க ஒப்புதல் கடிதம் பெற்றுள்ளேன். அது எமசாஆ**.1** ஆகும். மேற்படி அழைப்பாணையில் கேட்டவாறு மாரிமுத்து த/பெ. தோடன், வடக்கு சின்ன கல்ராயன் மலை, க.எண்.943, நடுவளைவு கிராமம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், சேலம் மாவட்டம் என்ற முகவரியில் உள்ளவருக்கு 24.08.2015 ஆன விபத்து நடந்த தேதியில் எங்கள் அலுவலக கோப்புகளை பார்த்த வகையில் அவருக்கு எந்தவிதமான ஓட்டுநர் உரிமம் எங்களால் வழங்கப்படவில்லை, அது சம்மந்தமான ஆவணம் எமசாஆ**.2** ஆகும்.

மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை

1) மேற்படி நபர் வேறு ஏதாவது விலாசத்தை முன்நிறுத்தி ஓட்டுநர் உரிமம் வாங்கியிருந்தால் வேறு ஏதாவது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாங்கியிருந்தால் எங்கள் கோப்பில் தெரியாது என்றால் சரிதான். அதே போல் கணினி மயமாக்கப்படாமல் இருந்திருந்தாலும் எங்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மசாஆ.3 ல் ஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுநர் உரிமம் ஒப்படைக்கப்பட்டதாக உள்ளது என்றால் அது ஆத்தூர் அதிகாரியால் வழங்கப்பட்டதால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி எனக்கு சாட்சியம் அளிக்கவே முகாந்திரம் இல்லை என்றும் மேலும் விபத்து

நடந்த பகுதி ஆத்தூர் வட்டார போக்குவரத்து எல்லைக்குள் வருகிறது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan**
**Accidents Claim Tribunal**
**Attur.**